# தேவதாயின் குரல்

"இறுதியில் எனது மாசற்ற இருதயம் வெற்றி கொள்ளும்"



FOR PRIVATE CIRCULATION ONLY

குரல்: 21 யாழ்ப்பாணம் ஆகஸ்ட் 1998

# ஆவி தரும் சாட்சிகள் எங்கே?

ஆசிரியருரை :-

கிறிஸ்து மனுவுருவானதன் 2000ம் ஆண்டு யூபிலிக்கு ''தூய ஆவியாலேயன்றி வேறு எவ்விதத்திலும் தயார் செய்ய முடியாது'' என்கிறார் பாப்பிறை இரண்டாம் அருள் சின்னப்பர். (T.M.A. 44) சில சபைகளும், அருங்கொடை இயக்க குழுக்களும், தாங்கள் அவரைக் குத்தகைக்கு எடுத்து விட்டனர் என்ற எண்ணத்தில் தலத்திருச்சபைகட்கும், பங்குச் சபைகட்கும், நிறுவன அமைப்புகட்கும் ஏன் குடும்பக் குழுக்களுக்கும் அவரது ஆற்றல் தேவையற்றது என்று எண்ணுவது தவறு.

பிறக்கவிருக்கும் யுகம், கிறிஸ்துவின் வெற்றியுகமாயிருக்கும் அல்லது தீமைகளின் தலைவன் எங்கும் ஊடுருவி தாண்டவமாடும் அழிவுயுகமாக மாறும்.

2000ம் ஆண்டுகட்கு முன் உண்மையான இறைவாக்கினர் ஒரு பக்கம் செயலாற்ற, போலி இறைவாக்கினரும் பவனி வந்துள்ளனர் என்பதை பழைய ஏற்பாடு சுட்டிக் காட்டுகிறது.

எசேக்கியேல் (13;3) கூறுவதாவது:- ''தலைவராகிய ஆண்டவர் கூறுவது இதுவே; மதிகெட்ட இறைவாக்கினருக்கு ஐயோ கேடு! அவர்கள் தம் மனம் போன போக்கில் நடக்கின்றனர். அவர்கள் ஒரு காட்சியும் காண்பதில்லை''

காண்க:- 1 அரசர் 22:19 23

இந்நிலை புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் பின்னுமாக கடந்த 2000ம் ஆண்டுகளாக திருச்சபையினுள்ளும் வெளியேயும் நிலவி வந்துள்ளது. உண்மைக்கெதிரான கொள்கைகளையும் கோட்பாடுகளையும், பேதங்களையும் பல வேதபாரகர்கள், புனிதர்கள் வன்மையாக—ஆணித்தரமாக, பகிரங்கமாக கண்டித்துள்ளதை திருச்சபை வரலாறுகள் கூறுகின்றன.

4ம் நூற்றாண்டில் பதிதன் ஆரியசை எதிர்த்த புனித அத்தனாசியஸ், 5ம் நூற்றண்டில் பெலேஜியரையும் டொனாத்தியரையும் எதிர்த்து வாதாடிய புனித அகுஸ்தீன், 11ம் நூற்றாண்டில் அல்பிஜென்சியரை தோற்கடித்த புனித அந்தோனியார், 16ம் நூற்றாண்டில் 5ம் என்றி அரசனை எதிர்த்த புனித தோமஸ்மூர், 13ம் நூற்றாண்டில் திருச்சபையின் உள்ளக சீர்கேடுகளை எடுத்துக் காட்டிய புனித பிரான்சீஸ் அசிசி, புனித சியன்னா கத்தரின், 16ம் நூற்றாண்டில் புனித இக்னேசியஸ் லொயலா, 18ம் நூற்றாண்டில் (இலங்கையில்) ஒல்லாந்த பதிதரை எதிர்த்த யோசவ்வாஸ், யாக்கோமே கொன்சலஸ், பெராவே அடிகளார், 19ம் நூற்றாண்டின் நவீன பேதகங்களை எதிர்த்த பாப்பிறை 10ம் பத்திநாதர், 20ம் நூற்றாண்டில் நாஜிஸ, பாசிஸ பேதகங்களை கண்டித்த பாப்பிறை 12ம் பத்திநாதர் அனைவரும் தூய ஆவியின் தூண்டுதலாலும் ஞானத்தாலும் செயற்பட்டோரே.

மூன்றாம் மிலேனியம் வந்து கொண்டிருக்கும் இவ்வேளையிலும், திருச்சபையினுள்ளும் அதன் தலைவர்களூடாக, அதன் அமைப்புகளூடாக குடும்பங்களூடாக தூய ஆவியின் துணிவான வரங்களைப் பெற்றுக் கொள்ள ஒவ்வொருவரும் தம்மைத்தாமே உணர்ந்து, சுத்தகரித்து தயார் பண்ணிக் கொள்ள வேண்டும். இல்லையெனில் வரும் மூன்றாம் மிலேனிய காலம் - சாத்தானின் வெற்றி ஆண்டுகளாக மனுக்குலம் சீர் குலைந்து அழிவுறும் ஆண்டுகளாகவே மாறும்.

இதற்கான அறிகுறிகளை இன்றே காண்கிறோம். வெகுஜனத் தொடர்பு சாதனங்களான பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி என்பன மூலம் அறிகிறோம்.

தினமும் 16000 பேர் எயிட்ஸ் நோய் காவிகளால் தாக்கப்படுகின்றனர். விபத்துகளும் அநியாயச் சாவுகளும் ஏராளம் தாராளம் .. போதை மருந்துகளை இலட்ச ரூபா கொடுத்தும் வாங்கி சிற்றின்பம் காண விளைவோர் தொகையும் கூடுகிறது. சிசுக் கொலை, சிறுவர் பாலியல் வன்முறைகள் கட்டுக்கடங்காது அதிகரிக்கின்றன. இவற்றால் பாதிக்கப்பட்டு சீரழியும் இளைஞர் நிலை வேறு.

இனப் போர், நவீன ஆயுதங்கள் ஏற்படுத்தும் மரணங்கள், சொந்த மண்ணை வீட்டை விட்டு விரட்டப்பட்டு தெருத் தெருவாக - ஊர் ஊராக அலையும் அகதிகள் ஆகியவை உண்டாக்கும் பயங்கர .. பரிதாபமிக்க பிரச்சினைகள் சொல்லிலடங்கா.

( 2 பக்கம் பார்க்க )

## இந்த இதழில்

1. சாட்சிகள்
2. விமரிசனம் 'விருட்சம்'
3. கிறிஸ்தவ சமூகவியல்
4. திருச்சபை வரலாறு
5. மரியாள் பரவச இயல்
6. விஞ்ஞானமும் மரியாளும்

# வன்னியின் "விருட்சம்"

வன்னி மாவட்ட ''விருட்சம்'' சஞ்சிகை, கிளை 1, கனி 4 யூலை மாத இதழைப் பார்த்த பொழுது சஞ்சிகையின் பெயர் வன்னிக்கும் அம் மக்கள் திருச்சபைக்கும் மிகப் பொருத்த மென எனது சிந்தனையில் பட்டது.

விருட்சம் சஞ்சிகையில் இறை இயல், விவிலிய கட்டுரைகள் ஒரு புறம். மல்லாவியில் இருந்து எழுதப்பட்ட ஞானேந்திர வசந்தியினதும், பொ. பத்திநாதரினதும், உள்ளத்தைத் தொடும் பெருமூச்சுக் கதைகள் மறுபுறம்.

''பாலி ஆற்றின் கரையில் இருந்தேன்
மணல் மேடுகளில்
உயிர் வற்றும் நாணல்கள்
காற்றில் பெருமூச்சைக் கலக்கும்
இருமருங்கிலும் ''

''மானிடம் போல் நின்றன மரங்கள் .. வேர் ஊன்றாத கீழ்ப் பிறப்புள்ளே .. பறவையை நம்பினும் மனிதனை நம்பாதே ..'' என்னுமோர் முதிரை மரம்.

சிறிது நிசப்தம் ...மீண்டும் பெருமூச்சு .

1986 ல் வெளிவந்த வன்னிக் கவிஞன் ஜெயபாலனின் ''ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும்'' என்ற நீண்ட கவிதையின் தொடக்கத்தில் வன்னியின் விருட்சங்களைப் பற்றிய அழகான வரிகள் என் நினைவில் அலை மோதுகின்றன, அதில் சில வரிகள்...

''மேலே பருத்து முறுகித் தொந்தி வைத்த மருத மரங்கள்...... கீழே புதியவை... நூறாண்டுகள் இதே வேரும் விழுதுமாய் இதே கரைகளில் வாழ்பவர் நாங்கள் ..''

போர்ச் சூழலில் அர்த்தமுள்ள கிறிஸ்தவத்தின் எதிரொலிகள் இரண்டு, பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒட்டகப்புலத்தில் இருந்து வேரறுக்கப்பட்டு வன்னியில் மல்லாவியில் வேரூன்றி நிற்கும் குடும்பங்கள் அநீதியான கொடூர நவீனப் போரின் மரணப்பறவை கிபீர் விமானக் குண்டு வீச்சில்...

ஒட்டகப் புலத்தில் கோவில் கொண்டு, பல புதுமைகள் ஆற்றியவள் அங்கே அவள் கோவில் அநாதரவு நிலையில் . ''அம்மா தாயே'' என்று அபயக் குரல் எழுப்பிய குழந்தையை, தேவதாய்காக்க விரைந்த அனுபவம்... விடுதலை இறை இயல் பேசினோர், அந்நிய மண்ணின் கரைகளில் நின்று கீதம் உரைக்க

''பாபிலோனின் ஆற்றங் கரைகளில் நின்று ''

நம் சொந்த மண்ணின் விசுவாச ஒலங்களின் மத்தியில் சிதறும் இரத்த தசைப் பிண்டங்களிடையே விடுதலை இறையியலை, கண்ணீரால் பொது நிலையினர் சிலர் எழுதுவது போல் தொனிக்கிறது. அவர் சந்ததி வளர்க.

வன்னியில் கிறீஸ்தவம் தேய்கிறது .. மண் எதிரியால் பறிக்கப்படுவது போல, கத்தோலிக்கரும் எம்மிட மிருந்து பறிக்கப் படுகின்றனர். அடிப்படை வாதக்குழுக்களுக்கு மருந்தாகும் ஆவியை அவர்கள் குத்தகைக்கு எடுத்து விடக்கூடாது. நாமும் விடக்கூடாது ஆவி நம் புதுப் புறப்புரிமை.

உண்மையான யூபிலி ஆண்டை விரும்பும் தேவ அழைத்தல் ஆவியால் இயக்கப் படும் புதுப்பிக்கப்பட்ட கிறிஸ்தவர்களும், கிறிஸ்தவ குடும்பங்களும், அன்புக் குழுமங்களும் உருவாக - பெருக புதிய வகைக் குருமடங்கள் (இல்லறத் தோருக்கும், துறவறத்தோருக்கும்) தேவை. இதை 1918 ம் ஆண்டு பாதுகாவலனே சுட்டிக் காட்டிற்று. அவை பாரிய கட்டிடங்களாக அல்ல, பாரிய கட்டிடங்கள் குண்டுகளைக் கவரக் கூடும். சாந்திநிகேதன் போன்று பெரிய விருட்சங்களின் நிழலில் குடிசைகளில், நிக்கரக்குவானின் ஆற்றுப் புற சொலன்ரீனஸ் குழுமங்கள் போன்று உருவாக முடியாதா? வடக்கில் ''விடுவிக்கப்பட்ட'' குடாவிலும் தெற்கு திருச்சபையிலும் விருட்சம் சொல்லும் ... ''விண்ணக ஆசி வேண்டி, உண்மை அறைபடும் பொழுது மௌனம் காத்து கொலைகாரரை திருப்தி செய்து கொண்டாட்டங்களை நடாத்தி, களியாட்டங்களை பெருக்கும் போக்கு காணப்படுகிறது''

வன்னியின் ஒலங்களை, பெரு மூச்சுக்களை கேட்க வேண்டிய நிசப்த இடைவெளி, மேற்கூறிய சலசலப்புகளால் இல்லாது ஆக்கி விடுகிறது. S. J .பிரான்சிஸ் எழுதும் ''உமது நேச அக்கினியை பற்றி எரியச் செய்தருளும்'' என்று செபிப் போமாக.

---

## ஆவி தரும் . . .

( 1 ம் பக்க தொடர்ச்சி )

இத்தகைய செயற்கை அழிவுகளை, நவீன விஞ்ஞானம் தரும் பேரழிவுகளை மிஞ்சும் வண்ணம் இயற்கை அழிவுகளாக நிலநடுக்கும், எரிமலைகளின் கோரங்களைத் தாக்கி எறியும் வண்ணம் வெப்ப எல் நைனோவும், குளிர் லா நினோவும் பயங்கர அனர்த்தங்களை அனைத்துலகிலும் வீசிக் கொண்டிருக்கின்றன.

அகப்பட்டதைச் சுருட்டும் கொள்கையாளரும் தான் தோன்றித் தனமான அரசியல் வாதிகளும், பணம், மது, மாது என்ற பற்றுகளுடன் திரியும் துறவிகளும், பதவி மோகமும், காட்டு மிராண்டித் தனமுமே இன்று உலகின் தலைவிதியை நிர்ணயிக்கும் காரணிகள்.

''உங்கள் சபையிலும் எங்கள் சபைகளிலும் பணவாஞ்சையும், பதவி மோகமும் அதிகரித்துள்ளன. பணி வாழ்வு, பணம் பெருக்கும் உத்தியோகமாக மாறிக் கொண்டிருக்கிறது'' என மிகக் கவலையுடன் என்னிடம் கூறினார் ஓர் இளம் கிறிஸ்தவ டாக்டர்.

இவற்றுக்கு மாற்று மருந்து .... ?
விடை ...... ? இறையேசு தரும் ஆவி.

''இறைவனை அடைய விரும்பும் எம் மனிதனும் தூய ஆவியின் வழியாகவே இறைத்தேடலில் இறங்க முடியும் யேசுவைப் பின்பற்ற விரும்பும் ஒவ்வொருவரும் இறை தந்தையால் ஈர்க்கப் பெறவும், பரிசுத்த ஆவியால் அசைக்கப் படவும் வேண்டும்'' (கத்தோலிக்க திருமறைக்கல்வி 259)

மனிதனை அவனது குறைபாடுகளிலிருந்து விடுவித்து அவனுக்கு இறைவனோடு உறவு கொள்ளக்கூடிய ''இறையாற்றலை'' தருபவர் தூய ஆவியே.

ஆவியின் ஆண்டான 1998 ல் ஆவியிலே வாழ. முழுமூச்சோடு முடிவெடுப்போம்.

''தூய ஆவியின் வருகை மென்மையானது. அவரது பிரசன்னம் இனிமையானது. அவரது நுகம் எளிது.

ஆவியானவரின் ஒளி உள்ளத்தையும் மனதையும் ஒளிர்விக்கிறது.

எம்மைப் பாதுகாக்கவும், பலப்படுத்தவும், மீட்டுக் கொள்ளவும் உற்சாகப் படுத்தவும் ஆவியார் வருகிறார்'' என்றார்.

- எருசலேமின் புனித சிறில்

# கடமையின் எல்லையை நோக்கி ...

நேர்மைக்காக, உண்மைக்காக, நற்செய்திக் கருத்துகளை பரப்பியதற்காக டொறத்தி பல தடவைகள் சிறைசெல்ல நேரிட்டது. ஆகாயப்போர் விமானக் குண்டு வீசப்படும் போது, பாதுகாப்புப் பயிற்சி எடுப்பதற்கான நடவடிக்கைகளை டொறத்தியும் அவள் சகாக்களும் எதிர்த்தனர். இவ்வித பயிற்சிகள் போருக்கான மனப்பக்குவத்தை உண்டாக்குவதற்கே ஏற்படுத்தப்படுகின்றன, என 'கத்தோலிக்க தொழிலாளி' ஆசிரிய குழு பலமாக வாதாடியது. இவ்வெதிர்ப்பியக்கம் ஐந்து வருடங்களில் ஏராளமான ஆதரவாளர்களுடன் இயங்கியது. ஹால்பார்க் நகரிலுள்ள இராணுவ மேஜரின் அலுவலகத்துக்கு முன்னால் நாலாயிரத்துக்குமதிகமான ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒன்றுதிரண்டனர். இராணுவமும் போலீசும் ஓர் குறிப்பிட்ட அளவு எதிர்ப்பாளர்களையே கைது செய்து ஏனையோரை பலவந்தமாக கலைத்தனர்.

பெண்கள் தடுப்புக் காவல் நிலையத்தில் தனது அனுபவங்களைத்திரட்டி ஓர் அறிக்கையாக டொறதி வெளியிட்டாள்.

சீசர் சர்வேசுக்கும் அவரது சகாக்களான திராட்சைத் தோட்டத் தொழிலாளிகட்காகவும் 'கத்தோலிக்க தொழிலாளி' குரல் கொடுத்தது. இத்தொழிலாளிகளின் உரிமைப் போராட்டம் திராட்சைப்பழக்காந்தி என்றழைக்கப்பட்ட எவரின் தலைமையில் இடம் பெற்றது. நாட்டின் தேசிய நலன்கட்கெதிராக போராட்டம் நடத்தியதாக குற்றம் சாட்டப்பட்டு டொறதியும் தொழிலாளிகள் பலரும் பன்னிரு நாட்கள் சிறைவாசம் அனுபவத்தனர். இதுவே டொறதியின் கடைசி சிறையனுபவம்.

1960களில் வியட்னாம் போருடன் போர் எதிர்ப்பு மனோ பாவத்தில் ஒரு எழுச்சியை மக்களிடையே அவதானிக்க முடிந்தது. கத்தோலிக்க சமாதானச் சகோதரத்துவத்துக்கும் நீதியுடன் கூடிய சமாதானத்துக்குமான கொள்கைகளை கத்தோலிக்க தொழிலாளி பெருமளவில் முன் வைத்தது.

இச் சமாதான இயக்கம் அனைத்துலகுக்கும் பரவத் தொடங்கியது, எனவே 1950 களில் டொறதியின் சர்வதேச சமாதான யாத்திரைகளும் தொடங்கின அவளது உரையாற்றல், எழுத்தாற்றலும் அவளைத் தொடர்ந்தன. 'சமாதானம்' என்ற தலைப்பில் அவளாற்றிய உரைகளும் எழுதிய கட்டுரைகளும் சமாதான ஆர்வலர்களால் நன்கு வரவேற்கப்பட்டன.

2ம் வத்திக்கான் சங்கத்தின் இறுதிக் கட்டத்தில் போரும் சமாதானமும் பற்றி விவாதிக்கப்படுவதற்கு முன் டொறதியும் சகாக்கள் சிலரும் ரோமாபுரி சென்றனர். தம் கருத்துகளை பிரசுரங்கள், பத்திரிகை அறிக்கைகள் மூலம் சங்கபிதாக்களிடையே பரப்பினர். 'சங்கமும் குண்டும்' என்ற தலைப்பில் 'கத்தோலிக்க தொழிலாளி' வத்திக்கான் சங்க கருத்துகளையும் விளக்கங்களையும் தொகுத்து ஒரு விசேட இதழாக வெளியிட்டது.

டொறத்தியின் சர்வதேச சமாதான யாத்திரை பல முற்போக்குவாதிகளையும் சமாதான ஆர்வம் மிகுந்த புத்திஜீவிகளையும் அவளது நண்பர்களாக்கியது. 'இளமையின் மரணசாசனம்' என்ற நூலின் ஆசிரியை வேராபிரிட்டன் லண்டனில் மகாத்மா காந்திஜியை வரவேற்று விருந்தளித்தமியூரியல் லெஸ்டர் மகாத்மாகாந்தியினால் சமாதான சேவகர் என்றழைக்கப்பட்ட லான்சொடல் லஸ்தோல் கல்கத்தாவின் அன்னை தெரேசா, டெல்லியின் 'கிறெயல்' இயக்கத்தலைவிஎலிசபெத்ரிடும், காந்தியவாதி தெய்வேந்திரகுமார் குப்தா முதலியோர் அவர்களிற் சிலர்.

வீடற்றவர்கட்கும், கைவிடப்பட்ட அனாதைகட்கும் ஏழைகட்குமான வரவேற்பு இல்லங்களை நடத்திய டொறதியின் தொண்டர்கள், தனது கல்கத்தாவில் ஏழைகள், கைவிடப்பட்டோர், அனாதைகளான நோயாளர்களையும் வீதிகளில் எறியப்பட்ட குழந்தைகளையும், அநாதரவாக கிடந்த வயோதிபர்களையும் ஒரு கடமை, கட்டுப்பாடு, நிரம்பிய வாக்குத்தத்தமெடுத்த அர்ப்பணவாழ்வு நிரம்பிய துறவிகள் சபை போலல்லாது, எதுவித வாக்குத்தத்தமோ அல்லது உறுதியான அர்ப்பணமோ இன்றி, விருப்பப்படி வந்தும் வெளியேறிக் கொண்டிருக்கும் நிலையில் எவ்விதம் வெற்றிகரமாக இயக்குகிறார்களென்பது அன்னை தெரேசாவுக்கு பெரிய ஆச்சரியமாக இருந்தது.

உலகில் மிகச் சிறந்த, கற்பாறைக்கு நிகரான விசுவாசத்தை, கடவுளது பராமரிப்பில் கொண்டிருக்கும் இருவர் அன்னை தெரேசாவும் டொறதி அம்மையாருமென ஒரு புகழ்மிக்க இறையியலாளர் குறிப்பிட்டார்.

பெரியவற்றிலிருந்து சிறிய கருமம்வரை தனக்குக் கிடைத்த எல்லா நலன்கட்காகவும் நன்றியுணர்ச்சியுடன் பணியாற்றிமையே டொறதியின் ஆளுமைக்குக் காரணியாகும். தனது கல்லறையில் 'இறைவனுக்கு நன்றி' என்ற இரு சொற்கள் பொறிக்கப்பட்டால் போதும் என அவள் ஒரு முறை கூறினாள்; அவளுக்கு நன்மையைக் கொண்டு வந்த எல்லா நிகழ்வுகட்காகவும், சிறப்பாக தனக்கு உன்னத மகிழ்வை அளித்த விசுவாசமாகிய கொடைக்காகவும் அவள் அடிக்கடி இறைவனுக்கு நன்றி கூறுவாள்

அதிகாலையில் கண்விழிக்கும் டொறதி செபத்துடன் அந்த நாளை ஆரம்பிப்பாள். இறைவாக்குகளை வாசித்து திருப்பாக்களை தியானித்தபின் எழுத்து, வாசிப்பில் காலையுணவுவரை செலவிடுவாள்,. புனிதர்களான அவிலா திரேசா, சிறிய புஷ்பம், பிரான்சிஸ் அசிசி, நோர்விக்சின் பொன் மொழிகளே டொறதியின் பிரயாணத்தோழர்கள். அவளது செபவாழ்வும் திருவருட் சாதனங்கள் மட்டிலிருந்த நெருக்கமும், அவளையும் அவளது இயக்கத்தையும் சூழ்ந்த தாக்குதல்கள் அவமானங்களை மேற்கொள்ளத் தேவையான தருணத்தில் நம்ப முடியாத அளவு சக்தியை அளித்தன.

திருப்பலி அவளது வாழ்வின் மையமாக இருந்தது. கிறிஸ்துவின் திருவுடல் திரு இரத்தமே டொறதியின் சக்தியும் துணையுமாகும் ''அப்பம் பிட்கையில் நாம் கிறிஸ்துவை அறிகிறோம். அயலவர் ஒவ்வொருவரையும் அறிகிறோம். நாம் இனிமேல் தனியாக இல்லை, எமது தோழமை உறவுகள் மேல் ஓடாகவுள்ள எமது வாழ்வும் ஒரு விருந்தே'' என்பது அவளது கூற்று.

கிரோஷிமாவில் அணுக்குண்டு வீசப்பட்ட வருடாந்த நினைவு தினமான ஆகஸ்ட் 6 ல் கல்கத்தாவின் அன்னை வருடாந்த நினைவு தினமான ஆகஸ்ட் 6ல் கல்கத்தாவின் அன்னை தெரேசா, பிரேசிலின் டொம்ஹெல்டர் கமரா முதலியோருடன் போர் எதிர்ப்பு பற்றி டொறதி உரையாற்றிய போது கரகோஷமும்பாராட்டுதல்களும் கிடைத்தன. நற்செய்தியின் வார்த்தைகளை படித்து விட்டு கிறிஸ்தவர்கள் போரை உருவாக்குவதைவிட, சமாதானம் செய்பவர்களாகவும் எல்லா மனித உயிர்கள் மேலும் இரக்கமும் அன்பும் கொண்டவர்களாயிருக்கவும் தூண்டிக்கொண்டேயிருந்த இச்சாதாரண பெண்ணின் போர் எதிர்ப்புச் செய்திகட்கு என்றுமில்லாத ஆதரவை வரலாறு கொடுத்திருக்கிறது.

( 6 ம் பக்கம் பார்க்க )

# பாப்புவின் அரியணையில் 33 நாட்கள்

1978ம் ஆண்டு ஆகஸ்ட் 27ம் நாள் பகல் 12 மணி. புதிதாக பாப்பரசராக தெரிவு செய்யப்பட்ட கருதினால் அல்பேட்டோ லூசியாணி 1ம் அருள சின்னப்பர், ரோமை நகர இராயப்பர் பேராலயத்தின் மாடியில், மூவேளைச் செபத்தை மக்களோடு செபிப்பதற்காகத் தோன்றினார். ''நேற்று மாலை நான் மன அமைதியுடன் சிஸ்ரைன் சிற்றாலயத் நடைபெற்ற பாப்பு தேர்தலில் வாக்களிக்கச் சென்றேன். அவர்கள் என்னைத் தெரிவு செய்வார்கள் என்று நான் கனவிலும் கருதவில்லை. வாக்குச் சீட்டுகளில் உள்ள பெயர்கள் வாசிக்கப்படும் போது நான் அதிர்ச்சி அடைந்தேன்'' எனப் புதிய பாப்பு பேசத் தொடங்கினார்.

தொடர்ந்து அவர் கூறினார் ''எனக்கு இடது பக்கத்திலிருந்த கருதினால் ,திடமாயிரும்; இறைவன் ஒரு சிலுவையை உம் மீது சுமத்தினால் அதைச் சுமந்து செல்வதற்குரிய சக்தியையும் தருவார்'' என ஆறுதலளித்தார். எனது வலது புறமிருந்த கருதினால் ''அஞ்சாதீர் அனைத்துலகிலுமுள்ள இறைமக்கள் பலர் புதிய பாப்புவுக்காகச் செபித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்றார்''

பாப்பரசராக ஒரு கருதினால் தெரிவு செய்யப்பட்ட பின் தமது சொந்தப் பெயரைத் துறந்து வேறொரு பெயரை சூட்டிக்கொள்வது பாப்புமார் தேர்தலில் ஒரு சம்பிரதாயம். இரு பெயர்களை ஒன்றிணைத்து சூட்டிக் கொண்டது பற்றியும் புதிய பாப்பு கூறினார்.

''என்னை இராயப்பர் பேராலயத்தில் ஆயராக திருநிலைப்படுத்தியவர் 23ம் அருளப்ப பாப்பரசர். வெனிஸ் நகர பேராயராகவும் பிதாப்பிதாவாகவும் நியமித்து எனக்குப் பெருமையளித்தவர் அவர். ஆறாவது சின்னப்ப பாப்பரசரே என்னைத் திருச்சபையின் இளவரசர்களுள் ஒருவராக (கருதினால்) நியமித்தவர். எனவே இந்த இரு பாப்பரசர்களையும் நன்றியுடன் என்றும் நினைவுகூர அருள் சின்னப்பர் என அழைக்கப்படுவேன். என்னிடம் அருளப்ப பாப்புவின் ஆன்மீக ஞானமோ, சின்னப்ப பாப்புவின் அறிவியற் பண்புகளோ இல்லை. எனினும் இவ்விரு புகழ்மிக்க திருத்தந்தையர்களைத் தொடர்ந்து திருச்சபையை வழிநடத்தும் பொறுப்பு என்னிடம் தரப்பட்டுள்ளது. உங்களனைவரதும் செப வேண்டுதல்களால் எனக்கு உதவி செய்வீர்களெனத் திடமாக நம்புகிறேன்''

உலகு அதிக அளவில் எதிர்பாராத ஒருவர் இராயப்பரின் சிம்மாசனத்துக்கு உயர்த்தப்பட்டமை கண்டு ஒரு கணம் ஆச்சரியத்தில் வாழ்ந்த மக்கள் வெள்ளம் தாழ்மை, எளிமை ஆகிய பண்களோடு அவரது அழகிய வதனத்தில் ஒளிர்ந்த அசாதாரண புன்னகையாலும் கவரப்பட்டு புதிய பாப்புவை வாயார வாழ்த்தியது.

1978 செப்டெம்பர் 3ல் நடைபெற்ற திருச்சபைத் தலைவராகப் பதவியேற்கும் வைபவமும் அவரது விருப்பப்படி ஆடம்பரங்களற்ற நிகழ்வாகவே விளங்கியது.

செப்டம்பர் 23ல் திருத்தந்தை 1ம் அருள் சின்னப்பர் ரோமை நகரின் புனித லத்தறன் அருளப்பர் பேராலயத்துக்குச் சென்றார். (ஆளுகை செய்யும் பாப்பரசர் ரோமை நகரின் ஆயராகவும் பணியாற்றுபவர். புனித லத்தறன் அருளப்பர் பேராலயமே, ரோமை நகரின் ஆசனக் கோவில் ஆகும்)

ரோமை நகர மக்களும் பங்குத் தந்தையர்களும் ஏனைய குருக்களும் நகர பிதாக்களும், அரச அலுவலர்களும் மேயர் தலைமையில் உற்சாகமான வரவேற்பொன்றை அளித்தனர். அடுத்த நாள் இராயப்பர் பேராலயத்தில் நண்பகலில் மக்களுடன் மூவேளைச் செபத்தைச் செபித்த பின் திருத்தந்தை இவ் வரவேற்பை உணர்ச்சியுடன் கூறிவிட்டுத் தொடர்ந்தார்.

''மகிழ்வு மிக்க இந்நிகழ்வுகட்கிடையே மனதை வருத்தும் நிகழ்வுகளும் எம் இதயத்தில் மோதுகின்றன. அண்மையில் ஒரு மாணவன் அநியாயமாகக் கொல்லப்பட்டதும், ஒரு ஏழு வயதுக் குழந்தை கடத்திச் செல்லப்பட்டதும் மனிதாபிமானமும் காருண்ணியமும் எம் சமூகத்திலிருந்து விரட்டி விடப்பட்டனவா? நேர்மையினமும் பண்பற்றதுமான ஒரு துர்ப்பாக்கிய நிலையை நோக்கி நமது சமுதாயம் விரைந்து சென்று கொண்டிருக்கிறதா என்றெல்லாம் சிந்திக்கத் தூண்டும்''

''இல்லை! எம்மிடையே நேர்மை, உண்மை, அன்பு முதலிய நல்லியல்புகள் நிறைந்த பண்பாளர்கள் பலர் உண்டு. இவர்கள் ஒரு புதிய உலகை உருவாக்க முயற்சிக்க வேண்டும். கிறிஸ்து கூறியது போல் இந்த நற்பண்பாளர்கள் ஏனைய மனிதர்களை ஒளிர்விக்க வேண்டும்''

ஐந்து நாட்களின் பின் (1978 செப்ரம்பர் 29) வத்திக்கான் வானொலி, இரவில் துயில் கொள்ளும் போது திருத்தந்தை மாரடைப்பால் மரணமானார் என அறிவித்தது. அவரது படுக்கையில் தலையணையின் பக்கத்தில் 'கிறிஸ்து நாதர் அனுசாரம்' என்ற தியான நூல் விரித்தபடி இருந்ததாக உதவியாளர்கள் தெரிவித்தனர். பாப்புவின் அரியணையில் 33 நாட்களே அவர் அரசோச்சினார்.

1ம் அருளப்பரின் புன்னகையும் அன்பு பொதிந்த வார்த்தைகளும் அவரை பிறந்தகமான வட இத்தாலியிலும் பணியாற்றிய பங்குகளிலும் ஆயராக வெனிசிலும், 33 நாட்கள் திருச்சபைத் தலைவராக அனைத்துலகிலும் மிகுந்த செல்வாக்கை தேடித் தந்தன. அவர் மரித்த செய்தியை அறிந்தவுடன் அவரது சொந்த நகரான கானல் அகோர்டோ முழுவதிலும் கறுப்புக் கொடிகளையும் அனுதாப வாசகங்களையும் தொங்கவிடுமாறு நகர மேயர் உத்தரவிட்டது மன்றி ஆலயத்தில் நடைபெற்ற நிருவிரங்கல் திருப்பலி வழிபாடுகட்கு தமது உத்தியோக சீருடையுடன் சென்றார். ஒரு கம்மியூனிஸ்தரான நகர மேயர் 20 வருடங்கட்கு மேல் ஆலயத்துக்குச் சென்றதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அவரது மரணம் இத்தாலியர்கள் மட்டுமே பாப்பரசர்களாகலாம் என்ற பாரம்பரியத்தை மாற்றியமைத்தது. 450 ஆண்டுகளாக தொடர்ந்து இத்தாலியர்களே பாப்பரசர் ஸ்தானத்தை அலங்கரித்தனர். 1ம் அருள் சின்னப்பரின் பின் போலாந்து தேசத்தவரான 2ம் அருள் சின்னப்பர் திருச்சபைத் தலைவரானார். இந்த மாறுதலுக்கு முக்கிய காரணம் திருச்சபையில் மறுமலர்ச்சியைத் தொடங்கிய 23ம் அருளப்ப பாப்புவும், பின்னர் தொடர்ந்த 6ம் சின்னப்ப பாப்புவும் கருதினால்மார் திருச்சங்கத்துக்கு இத்தாலியரல்லாத பலரை அனைத்துலகிலுமிருந்து நியமித்ததே.

ஒரு பாப்பரசரைத் தெரிவு செய்யும் உரிமை கருதினால்களுக்கு மட்டுமே உரியதாகும்.

# தேவதாயின் அற்புத வரலாறு [தொடர்ச்சி]

தேவமாதா தமது திவ்வியபாலகன் காணாமற் போனதைப் பற்றி சம்மனசுக்களைக் கேட்க, அவர்கள் மறுமொழி சொன்னதில்லை. சிலவேளை அர்க்கலாஊஸ் இவரைப் பிடித்துக் கொண்டு போயிருக்கலாமென்றும் அல்லது தங்களுடைய தவறினாலேயே அவர் அகன்று போயிருக்கலாமென்றும் நினைத்து இருவரும் இருதயங் கலங்கி விம்மியழுது கொண்டு உணவு ஏதும் சாப்பிடாமல் முன்வந்த வழியே திரும்பிச் சென்று உறவினர்களிடத்திலும் தெரிந்தவர்களிடத்திலும் திவ்வியபாலகன் பற்றி கேட்ட பொழுது அவர்கள் தமக்கு ஒன்றும் தெரியாது என்று சொல்ல, பாலகன் சில வேளை ஸ்நாபக அருளப்பரிடத்திற் போயிருப்பாரென்று நினைத்து அவரிடத்திற்குப் போக தீர்மானம் எடுத்த வேளை சம்மனசுக்கள் அங்கே போவதனால் பயன் இல்லை என்றார்கள். இதைக் கேட்டு மூன்று நாளும் ஆங்காங்கே தேடித் திரிந்த பின்பும் சிலவேளை பெத்லேமின் சிற்றூரின் குகையைப் பார்க்க அங்கே போயிருப்பாரென்று நினைத்து தாங்களுமங்கே போகத் தீர்மானித்தார்கள். தேவதூதர்கள் அந்தப் பயணத்தையும் தடுத்து விட இவர்கள் மனம் நொந்து ஜெருசலேம் பட்டணத்திற்கு வந்து திவ்விய பாலகனுடைய தலைச்சிகை, முகரூபம், சரீரபருமன், அவரணிந்த உடை என்பவற்றின் அடையாளங்களைச் சொல்லி தெருத் தெருவாய் போய்க் கேட்க ஓர் பெண் இப்படிப்பட்ட குழந்தை தன்னுடைய வீட்டில் வந்து பிச்சை கேட்டாரென்றும் அலருக்குப் பிச்சை கொடுக்கும் போது ஏதோ ஒரு தேவலோக சந்தோஷம் தன் இதயத்தில் தோன்றியதென்றும் அந்தப் பாலகனைத் தன் கண்ணால் பார்க்கும் போது தனக்கு ஆனந்த சந்தோஷம் உண்டானதென்றும் சொன்னாள். இதைக் கேட்டுத் தேவமாதாவும் சூசையப்பரும் அன்னசத்திரத்திற்குத் திரும்பிப் போய் அங்கே இருந்தவர்களுக்கு பாலகனின் அடையாளங்கள் எல்லாம் சொல்லி கேட்க, அவர்கள் அன்னசத்திரத்தில் இப்படிப்பட்ட பிள்ளை ஏழைகளுக்கு ஆறுதல் சொல்லி அவர்கள் மனத்தைத் தேறுதல் செய்தார்; திரும்பி எவ்வழியாகப் போனாரென்று எங்களுக்குத் தெரியவில்லை என்று சொல்ல, தேவமாதா சில வேளை இவர் தேவாலயத்தில் இருப்பாரென்று நினைத்து சம்மனசுகளைக் கேட்டாள். அவர்கள் அங்கே போய்த் தேடலாமென்று மறுமொழி கூறினார்கள்

இவர்கள் அவ்விடத்திற்குப் போய் திவ்விய குழந்தை வேத ஆசாரியர்களோடு வேத சித்தாந்தத்தைக் குறித்து தர்க்கம் செய்வதைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள். அதன் பின் தேவ மாதா அவரிடத்தில் சென்று, மகனே! எங்களுக்கு ஏன் இப்படிச் செய்தீர்? இதோ உமது பிதாவும் நானும் சொல்ல முடியா துன்பத்துடன் உம்மைத் தேடிக் கொண்டிருந்தோம் என்றாள். அவரும் அர்ச் லூக்கா சுவிஷேசத்தில் சொல்லப்பட்டபடியே அவர்களுக்கு மறுமொழி சொல்லி அவர்களோடு கூடப் புறப்பட்டார்.

யேசு நசரேத்தூரில வாழ்ந்த பதினெட்டு வருடங்களின் சரித்திரத்தைப் பற்றி சுவிசேஷகர், அவர் அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார் என்னும் வாக்கியத்தைத் தவிர வேறொன்றையும் சொன்னதில்லை. ஏனெனில் அவர் அவ்விடத்திற் செய்த தெய்வீக அற்புத காரியங்கள் மனிதருடைய புத்திக்கு எட்டும் தன்மையல்ல. அவ்விடத்திலே தான் தேவமாதா பரிசுத்த திருச்சபையினுடைய சகல பரம இரகசியங்களையும், சடங்குகளையும் அவரிடத்திற் படித்தாள். எழுதப்படப் போகிற நான்கு சுவிஷேங்களின் ஆழ்ந்த இரகசியங்களை எம் மாத்திரம் தெளிவோடு அறிந்திருந்தாளென்று சொல்ல மனிதருடைய நாவு தகுதியானதல்ல. தேவமாதா யேசுநாதருடன் சிறு செபக் கூடத்தில் அநேக நேரம் முழங்காலிலிருந்து கொண்டும் சிலுவையின் அடையாளமாகக் கரங்களை விரித்துக் கொண்டும் சில வேளை பூமியிலிருந்து அந்தரத்திற் தூக்கப்பட்டும் செபம் செய்வாள். யேசுநாதர் அவளுடைய மகனைப் போலவும் சில நேரத்தில் அவளுடைய எசமானைப் போலவும் நடந்து கொண்டு தபோரென்னும் மலையிற் சம்பவித்தது போல தமது சரீரத்தில் தெய்வீக மகத்துவம் விளங்கும்படியும் செய்வார். சில தருணங்களில் அவர் சரீரத்திலிருந்து இரத்த வியர்வை புறப்பட கோபமுற்றிருப்பார். இப்படி நடக்கையில் தேவமாதாவுக்கு முப்பத்து மூன்று வயதானது. அதுதான் மனிதர்களுக்குச் சம்பூரணமான பலத்தின் காலம். மற்றயாவும் பலக் குறைவேயாகும்.

ஆனால் தேவமாதாவுக்கு எழுபது வயதாக இருக்கின்ற போதும் அவளது சம்பூரண பலமும் சவுந்தரியமும் மேனியும் ஒருக்காலும் மாறியதில்லை. ஆண்டவர் தமது திருக்குமாரனுக்கொப்ப இவள் சரீரம் இப்படியிருக்கச் சித்தமானார். ஆனால் அர்ச். சூசையப்பருக்கு வயது வரவர உடற்பலம் குறைந்து கொண்டு போனபடியால் தேவமாதா அவரை வேலை செய்ய வேண்டாமென்றும் தானே வேலை செய்து குடும்ப பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வதாகக் கூறினாள். சூசையப்பருக்கு இது விருப்பமில்லாது இருந்தாலும் தன்னுடைய இயலாமையை ஏற்றுக் கொண்டு சகலமான புண்ணியங்களையும் இடைவிடாத செபங்களையும் சொல்லிக் கொண்டு ஞான ஏகாந்தத்திலிருப்பார். மாமிசமாகிய இறைவனுடைய பரம இரகசியமே இவர் தியானத்துக்கு ஒரே பொருளாயிருந்தது. இவர்கள் உணவிற்காக கொஞ்ச வேலை மாத்திரம் செய்ய வேண்டியிருந்தபடியினால் சில பக்தியுள்ள பெண்கள் தேவமாதாவுக்குக் கொடுக்கும் வேலைகளே போதுமாயிருந்தது. தேவமாதாவும் திவ்விய குமாரனும் மச்சம், மரக்கறி முதலான சில பதார்த்தங்களை மாத்திரம் கொஞ்சம் சாப்பிடுவார்களேயன்றி ஒருக்காலும் மாம்சம் சாப்பிட்டதேயில்லை. தேவமாதா இரவும் பகலும் தியானத்திலிருந்து சற்று நேரம் மாத்திரம் இளைப்பாறுவாள். உணவு குறைவாக இருக்கும் போது திவ்வியகுமாரன் வீட்டிலிருக்கும் கொஞ்ச அப்பம் அதிகப்படவும் அல்லது சம்மனசுக்களை வேறு அப்பங்கள் கொண்டு வரும்படியாயும் செய்வார்.

(தொடரும்)

ஆவணி 6ம் நாள் கிரோசிமா மீது அணுக்குண்டு வீசிய தினம். தேவதாய் பற்றிமாவில், சூரியனில் வெளிக்காட்டிய புதுமை உலகிற்கு அணு ஆயுதங்களினால் ஏற்படும் நெருப்பு அழிவையும், அதைத் தடுத்து எம்மைக் காப்பாற்ற இறைவனால் மாத்திரமே முடியும் எனவும் எண்பித்தார்.

# விஞ்ஞானமும் தேவதாயின் காட்சிகளும்

தேவதாயின் காட்சிகளின்போது பரவச நிலைக்கு உட்படும் காட்சிகாண்போரை விஞ்ஞானிகள் முதலில் பரீட்சித்த இடம் மெஜுகோர்ஜே, தான் லூர்திலும் (1858) பத்திமாவிலும் (1917) இவ் வசதிகள் இருக்கவில்லை.

றெனே லவ்றன்ரைன் என்னும் பிரபல பிரான்சிய இறையியலாளர், கென்றி ஜொய்ஸ் என்ற உலகப் புகழ்மிக்க பிரான்சிய வைத்திய நிபுணருடன் சென்று நடத்திய விஞ்ஞான ஆய்வுகள் மற்றும் பல இத்தாலிய விஞ்ஞான நிபுணர்கள் நடத்திய ஆய்வுகள் குறிப்பிடத்தக்கவையும் உண்மை நிலையை எடுத்துக்காட்டுவனவும் ஆகும்.

மூளையின் எட்டு இடங்களில் நடப்பவற்றைப் படம்பிடிப்பது, இலத்திரனியல் பரிசோதனைகள் என்பன இவ் வாய்வுகளில் முக்கியமானவை.

''காட்சி கண்டவர்கள்'' பரவச நிலையில் நித்திரை செய்யவில்லை, கனவு காணவில்லை, எவ்வகை மனத்தளர்ச்சி நிலையும் இருக்கவில்லை, தாமே ருபிகரிக்கும் நிலையோ பாசாங்கு நிலையோ இருக்கவில்லை என விஞ்ஞான ஆய்வுகள் நிருபித்தன.''

இதை ARPA தலைவர் விஞ்ஞானி லூயிஜி பரினி உட்பட சர்வதேச இத்தாலிய பிரான்சிய விஞ்ஞானிகள் 12 ஆய்வு அறிக்கைகளில் வெளியிட்டனர். இதன் நிமித்தமே சில குரோட்சிய சமயத் தலைவர்களின் பிழையான அபிப்பிராயங்களை பாப்பரசரும் கருதினால் ரத்சிங்கரும் ஏற்கப் பின்வாங்கினர்.

பரவசத்தில் மெஜுகோர்ஜே இளைஞர்கள் கண்ட காட்சிகள், சாதாரண வாழ்வு நிலைகளிலும் விட யதார்த்தமாகவே தோன்றிற்று, பரவசநிலை நீங்கியதும், தூக்கத்தில் இருந்து எழும்புகிறவர்கள் போலல்லாது, மாறுதலுக்குள்ளாகும், தமக்குமுன் பழக்கப்பட்ட உலகிற்கு திரும்பி வருவது போலவே இருந்தது.

மெஜுகோர்ஜேயில் புதுமைகள் ஏராளமாக நிகழ்கின்றன. இவற்றில் பல, மருத்துவ நிபுணர்களால் நன்கு ஆய்வு செய்யப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

டயனா பசில் என்பவள் Atheroscle-osis என்ற நோயிலிருந்து அற்புத குணமடைந்தாள், இதுபற்றி பேராசிரியர் தியேபோ 150 மருத்துவ ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டுள்ளார்.

டமிர் கொறிக் என்பவரின் மூளை வருத்தம் அற்புத குணமடைந்ததுபற்றி டாக்டர் கொரியன் எழுதிய அறிக்கையில் ''இது மிகப்பெரிய புதுமை ஏனெனில் மூளையில் பழுதடைந்த சிறு பகுதியினிடமாக புதிய ஆரோக்கியமான பகுதி காணப்படுகிறது'' என விபரித்துள்ளார்.

பிரபல வைத்திய நிபுணர் அன்ரொனாச்சியோ ஒரு மருத்துவ நிபுணர் பட்டாளத்தையே மெஜுகோர்ஜேக்கு கொண்டு வந்து அற்புத குணமடைந்த 350 பேரைத தெரிந்தெடுத்து, ஆய்வு செய்து அனைத்தும் மனித. நவீன மருத்துவ சக்திகளாலும் - சாதனங்களாலும் குணமாக்கப்பட முடியாதவை என்றும் அவற்றில் 20 குணமடைதல் நிகழ்வுகள் அதி விசேடமானவை எனவும் பிரகடனப்படுத்தியுள்ளார்.

மெஜுகோர்ஜியில் காட்சி கண்ட அறுவரும் தேவதாய் உண்மையாகவே தம் முன் நின்று பேசுகின்றாள் என்றனர். ''நாம் அவளைத் தொடமுடிகிறது. உலகில் நாம் கண்டு, கலந்து பழகும் ஆட்களை விட உண்மையானவளாகவே இருக்கிறாள்'' என்கின்றனர்.

அவர்கள் காண்பது கனவல்ல என்பதை Encephalogram விஞ்ஞான ஆய்வுகள் நிரூபிக்கின்றன. ●

---

## கடமையின் . . .

( 3 ம் பக்கத் தொடர்ச்சி )

அனைத்துலகிலும் தன் சமாதானக் கொள்கையை அறைகூவி அதே பின்னணியில் போராட்டங்கள், உண்ணா விரதங்களை நடத்தி, பல தடவை சிறை வாசமும் அனுபவித்த டொறதி ஆண்டில் முதிர்ந்தாலும் அமைதிகாக்கும் போராட்டத்தை கைவிட்டவளல்ல நாற்காலியில் அமர்ந்து ஒலி வாங்கியின் முன்னால் தனது பொன்னான கருத்துகளை வாய் ஓயாது சொல்லி கட்டுரைகளாக்கி பிரசுரித்தும் தொடர்ந்து பணியாற்றினார் அடிக்கடி ஆலயம் சென்று நற்கருணை நாதரைத் தரிசிக்க முடியாத நிலைக்கு அவள் வந்தபோது தன் இறுதி நாட்களைச் செலவிட, தான் உருவாக்கிய இறுதி வரவேற்பில்லாமான ''மேரி'' இல்லத்தின் மேன் மாடியில் உள்ள தனது அறையில் வைக்கப்பட்ட சிறிய நற்கருணைப் பேழையினால் ஆறுதலும் மனத் தென்பும் பெற்றாள்.

1980 ம் ஆண்டு நவம்பர் 29 ம் நாள், தென் இத்தாலியில் நடைபெற்ற பயங்கர பூமி நடுக்கத்தின் விளைவுகளை தொலைக் காட்சியில் கண்டு பரிதவித்த டொறதி ''கத்தோலிக்க தொழிலாளி'' ஆசிரிய பீடத்துடன் தொலை பேசித் தொடர்பு கொண்டு அப்பயங்கரத்தில் சிக்கக் கொண்டவர்கட்காக என்ன செய்யப்படுகிறது என அவசரமாக வினாவினாள் ''உணவுப் பொதிகளும், மருத்துவ உதவிகளும் அந்த அகதிகட்குதவியாக போர்வைகளும் விமான மூலம் அனுப்பப்படுகின்றன ''என்ற பதில்கிடைத்தபோது ஆறுதலடைந்த டொறதி ''அந்தப் போர்வைகளில் பல உதவியாளரின் தேவையைத்தான் பூர்த்தி செய்யும்'' என நெட்டுயிர்த்தவாறு கூறினாள்.

மூன்று மணித்தியாலங்களின் பின் பழைய திருவழிபாட்டு வருடம் முடிந்து திருவருகைக்கால முதல் ஞாயிறு திருவிழிப்புப்பலி, மேரி இல்லத்தைச் சூழ்ந்திருந்த ஆலயங்களில் ஆரம்பமாகிக் கொண்டிருந்த வேளையிலே, அவ்வில்லத்தின் ஒரு மூலையிலே டொறதிடே, அமைதியாக இவ்வுலக வாழ்வைக் கடந்து சென்றாள், அவ்வேளை அவளது புதல்வி தாமர் தெரேசா அருகிலிருந்தாள்.

''தியாகத்தின் அர்த்தத்தை தன் சொந்த உடலாலும், இரத்தாலும் எங்கும் அவள் காட்டிக்கொண்டிருந்தாள்'' என செசார் செவேஸ் என்பவர் தனது அஞ்சலி உரையில் குறிப்பிட்டிருந்தார்.

நற்செய்தியை விடாப்பிடியாக வாழ்வதை வற்புறுத்திய ஒரு சாதாரண பெண்ணால் சமாதானப் புரட்சி, அறவழியை அன்பு செய்தல், அரசாங்கத்தின் அராஜகங்கட்கு மனச்சான்றின் அடிப்படையில் எதிர்ப்புத் தெரிவித்தல், என்பன அரை நூற்றாண்டுகளாக வழிநடத்தப்பட்டன. நவீன அணு வாயுதங்கள் எந்த நகரையும் திடீரென எரிசூளையாக மாற்றக்கூடிய உலகில் வாழ்ந்து கொண்டு, ''நீதியானபோர்'' என்ற மாயையில் கட்டுண்டு கிடந்த பலர் தட்டியெழுப்பப்பட வேண்டியிருந்தனர்.

டொறதி இல்லாமல் ''கத்தோலிக்க தொழிலாளி'' பத்திரிகையை எவ்விதம் நடத்த முடியும்'' என ஒரு வாசகர் கேள்வி கேட்டிருந்தார். பத்திரிகையின் ஆசிரியர் பெகிஷ்ரர் அளித்த பதில் எங்களோடு டொறதி இல்லாவிடினும் நற்செய்தி இன்னும் உளது''

---

Print : "Annai printers", Jaffna.
Published by PAX CHRISTI.
St JOSEPHS ASHRAM,
102, Main Street, Jaffna